பதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்.

விரோதி௵ (1889) ஆவணி௴ உ௨௨ ஆரம்பமானது.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

| பத்திரிக் கிரயம் | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு | ரு. 5-60 |
| வெளியூர், இந்தியா: ,, | ரு. 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: ,, | ரு. 9-40 |
| தனிப்பிரதி: | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

DUPLIC

| விளம்பர விகிதம். | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:— | ஒருகலம் | ரு. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரு. 5 00 |
| ,, | கால்கலம் | ரு. 3 15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு அவ் விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௫. } யாழ்ப்பாணம்:—ருதிரோற்காரி௵ ஆடி௴ ௨௪ (௧௯௨௩ ஜூலை ௧௧) வியாழக்கிழமை. } இலக்கம்—௫.


உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்தவிநாயகன்ருள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

---

யாழ்ப்பாணம்
## சைவபரிபாலனசபையாராற் பிரசுரஞ் செய்யப்பெற்ற
## புத்தக விளம்பரம்.

| | ரு. ச. |
|---|---|
| முதற்பாலபாடம்(சித்திரசகிதமானது) | க0 |
| இரண்டாம் பாலபாடம் ,, | க௫ |
| மூன்றும் பாலபாடம் ,, | உ0 |
| நான்காம் பாலபாடம் ... ... | ௩0 |
| ஐந்தாம் பாலபாடம் ... .... .... | ௪0 |
| ஆறும் பாலபாடம் .... ... ... | ௫0 |
| கலாமஞ்சரி எட்டாம் வகுப்பிலும், "ஆங்கில ஸ்கூல் லீவிங் சேர்ட்டிவிற்கற்"வகுப்பிலும் பயிலும்மாணவர்கட்குத் தமிழ்ப்பாடமாக உபயோகமாகும்வண்ணம் இயற்றப் பெற்றுள்ளது. விளக்கத்துடன் | எ௫ |
| கலாமஞ்சரிவிளக்கம்(மாத்திரம்) | ௩0 |
| கிருட்டிணன் றூது, உரையுடன் | அ௫ |
| நமச்சிவாயமாலை, உரையுடன்... | ௩ |
| ஆத்திசூடி ... ... ... | ௩ |
| வெற்றிவேற்கையுரை ... ... | ௩ |
| வாக்குண்டாமுரை ... ... ... | ௩ |
| நல்வழியுரை .... ... ... ... | ௩ |
| நன்னெறியுரை ... .... ... ... | ௩ |
| இனியவை நாற்பதுரை (ஆங்கிள மொழிபெயர்ப்புடன்)... ... ... | க௨ |
| இலக்கண வினவிடை... ... ... | க0 |
| நிகண்டு கக-வதும் க௨-வதும் ... | ௨௫ |
| திருவாதவூரடிகள்புராண மூலம் ... | ௨௫ |
| திருச்செந்தூர்ப்புராணவுரை | |
| கிளேஸ்காகிதம் ... ... ... | க-௨௫ |
| றவ்காகிதம்... ... ... ... | க-00 |
| கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன் | க0 |
| கந்தசஷ்டி கவசம் ... ... ... | ௩ |
| சுப்பிரமணியசுவாமி விருத்தம் ... | ௩ |
| ஆறுமுகசுவாமி விருத்தம்... ... | ௩ |
| பிள்ளையார்கதை ... ... ... ... | க௨ |
| கதிரைமலைப் பேரின்பக்காதல் ... | க௨ |
| பிரபஞ்சப் பெருவழக்கு ... ... | க0 |
| இந்துசமயி தாவரஜீவியாயிருத்த லேன்? ... ... ... ... ... | க0 |
| சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு) | ௬ |
| குமணசரித்திரம் ,, | ௬ |
| பஞ்சரத்தினத் திருப்புகழ் ... .... | ௩ |
| சோமவாரவிரதமான்மியம்... .... | க0 |
| கந்தவிரதமான்மியம் .... .... .... | க0 |
| சிவபூசைத்திரட்டு ... (புதியபதிப்பு) ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களது ஏட்டுப்பிரதியின்படி அச்சிடப் பெற்றது... ... ... ... ... | க௫ |
| மறைசையந்தாதி ... ... ... | ௨0 |

ஒரேமுறையில் 25/ ரூபாவுக்குப் புத்தகம் எடுப்பவர்களுக்குப் 10 புத்தகத்துக்கு 2 புத்தகம் கழிவுகொடுக்கப்படும்.

சபையாராலச்சிட்ட புஸ்தகங்கள் வண்ணார்பண்ணை, S. S. சண்முகம், M. S. துரை, பிறிற்றனியா ஸ்ரோர், சரஸ்வதி புத்தகசாலை முதலிய இடங்களிலும், வல்லுவெட்டித்துறை ந. வ. அரியகுட்டிப் பிள்ளையுடைய கடையிலும் தக்க கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்
வண்ணார்பண்ணை.

---

## பேசெல்மிஷன் கலிக்கற் ஓடுகள்.

கலிக்கற்றிலுள்ள பேசெல்மிஷன் தொழிற்சாலையிலே செய்யப்படும் இவ்வோடுகள் பெலன், செப்பம், நிலைக்குந்தன்மை இவைகளில் ஒப்பில்லாதவாய் மற்றெல்லா ஓடுகளிலும் விசேஷமானவென்று இத்தேசத்திலும் பிறதேசத்திலுமுள்ள நிபுணர் பலரால் ஒப்புக்கொள்ளப்பட்டது. சந்தேகப்படுவோர் சென்ற 25 வருடங்களாக மேன்மையாய் மதிக்கப்பட்டுவரும் இவ்வோடுகளால் வேயப்பட்டிருக்கும் ஏராளமான கட்டிடங்களைப் பார்க்கவும்.

ஓடு வாங்குஞ் சிநேகிதரே, வாங்குவதற்கு முன் நீங்களே ஓடுகளைச் சோதனைசெய்து பார்த்து உங்களைத் திருத்திசெய்துகொள்ளுங்கள்.

உவில்லியம் மேதர் அன் சன்ஸ்,
தனி ஏசன்றர்,
(H. 13.) (Sole Agents)

---

## காகிதாடா சேலை.

16 முழ நீளம்; 2½ முழ அகலம்.

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லில் சிவப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம் போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, சுற்றிலும் எழுத்துவேலையில் கரைகட்டியிருக்கும். இது புதுமாதிரி. இதுவரைக்கும் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.

## வெள்ளிக்கெண்டைச்சால்வை.

5½ முழ நீளம்; 2½ முழ அகலம்.

இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் நைஸ் நூலினால் நெய்யப்பட்டதுமான சால்வை.

ஒரு இஞ்சு வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:
கனக அண்டு கம்பெனி,
பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.
(Y. 18.)

---

## ஸ்ராண்டேர்ட் கொளுக்கியோடுகள்.
(Standard Tiles.)

இவை வேரூக் என்னுமிடத்திலுள்ள ஸ்ராண்டேர்ட் ஓட்டுக் கம்பனியாராற் செய்யப்படுவன.

இவ்வோடுகள் இக்காலத்திலுள்ள மற்றைய ஓடுகளைக்காட்டிலும் திறமானவையும் மலிவானவையும் இலேசானவையும் நீடித்தகாலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கனவுமாகும். இந்த ஓடுகளே இலங்கையிலும் இந்தியாவிலும் இக்காலத்தில் அதிகமாக உபயோகிக்கப் படுகின்றன. இவைகள் (வேயப்பட்ட வீட்டுள் வசிப்போருக்கு) குளிர்மையையும் தேகாரோக்கியத்தையுங் கொடுக்கத்தக்கனவாயும் எவ்விஷயத்திலும், ஏனையஓடுகளிலுஞ் சிறந்தனவாயுமிருக்கின்றன. யாழ்ப்பாணத்துள்ள சிறந்த கல்லூரிகளுக்கு இவ்வோடே உபயோகிக்கப் பட்டுள்ளன மற்றும் ஓடுகளை வாங்குதற்கு முன் இதனையும் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். விரும்புவோர் யாழ்ப்பாணத்திலேனும் வல்வெட்டித்துறையிலேனும் பருத்தித்துறையிலேனும் S. வீரகத்திப்பிள்ளையிடம் பெற்றுக்கொள்ளலாம்.
(H. 18.)

---

## சாலாமிஸ்ரி லேகியம்.

இந்தலேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தகா, பிதாலு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளி பஸ்பம், அயகாந்தசிந்தூரம்,சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு,நீர்க்கடுப்பு,நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள்உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்த காமாளை, பித்த பாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமாவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை இருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைறுத்தலுக்கு ரூபா க0. கால்றுத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினால் முன் மனிஆடர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
ஆரப்பத்தை,
காத்தான்குடி போஸ்டு,
(M. 1.) மட்டுக்களப்பு.

---

அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற மருந்துகள்.

## இழந்துபோன பலத்தை
ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில் கோடுக்கும்!!

## ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.
## தாதுபுஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.

ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!!

தாதுப் புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரிக்ஷை பார்க்கலாம்! தாது கட்டும், தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150-மாத்திரை ரூ. 10. 50-மாத்திரை ரூ. 4 0-0
20-மாத்திரை ரு 2. வி. பி. சார்ஜ்வேறு.

## பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

## ரசமணி.

சகல வசியம், தனலாபம், அருள், கீர்த்தி, தொழிலபிவிருத்தி, நினைத்தகாரிய சித்தி மென்மேலும் பெருகும். தொத்து நோய், அவமிருத்து தோஷம், மேகவியாதிகள் அணுகாது. உபயோகிக்கும்முறை மணியுடன் வரும். மணி 1-க்கு ரூபா 2. 6 மணி ரூபா 10.

பினங்கு, சிங்கப்பூர், நேட்டால், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

☞ T. R. கருப்பண பிள்ளை,
(Q. 40) வைத்தியசாலை, பழனி. S. I

---

## புத்தக விளம்பரம்.

தெல்லிப்பழை பிரம்மஸ்ரீ வித்துவான். சிவானந்தையரால், இயற்றிய புத்தகங்கள் என்னிடத்தில்பெற்றுக்கொள்ளலாம்.

1. தருக்கசங்கிரகம், நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டியம், நீலகண்டீயம் சேர்ந்த கட்டு விலை ரூபா 2-00
2. நம்பி அகப்பொருள்ளுரை ,, 1-00
3. நவக்கிரக கவசம் விலை அணு 1
4. சனிதுதி ,, ,, 1
5. தஷகாரியம் ,, ,, 5
6. இரகுவமிசம் மூலமும் உரையும் (முதற்பாகம்) 1-50

க. செல்லையாஐயர்,
சிவன்கோவில் வடக்குத்தெரு,
Y. 14. வண்ணார்பண்ணை.

---

Telegrams: "APPANNA', Bangalore City'

## கெ. தி. அப்பண்ணு & கம்பெனி,
பெங்களூர் நகர்,
(இந்தியா).

## பிரசித்திபெற்ற மைசூர் ஊதுவத்திகள்.

| | ரு.அ.பை. |
|---|---|
| பன்னீர்வத்திகள் சேர் 1க்கு விலை | 0-12-0 முதல் ரூபா 2-0-0 வரை. |
| புனுகுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா | 1-8-0 முதல் ரூபா 4-0-0 வரை. |
| மத்தாப்புவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா | 1-8-0 முதல் ரூபா 3-0-0 வரை. |
| ஐவ்வாதுவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா | 5-0-0 முதல் ரூபா 7-0-0 வரை. |
| கஸ்தூரிவத்திகள் சேர் 1க்கு விலை ரூபா | 5 0 0 முதல் ரூபா 12-0-0 வரை. |
| அம்பர்வத்திகள் சேர் 1க்கு விலை ரூபா | 1-8-0 முதல் ரூபா 20-0-0 வரை. |
| வாசனைவில்லைகள் வில்லை 1க்கு விலை ரு. | 0-4-0 முதல் ரூபா 5-0-0 வரை. |
| புனுகு தோலா 1க்கு விலை ரூபா | 10-0-0 முதல் ரூபா 12-0-0 வரை. |
| தசாங்கம் சேர் 1க்கு விலை ரூபா | 2-0 0 முதல் ரூபா 3-0-0 வரை. |

## கூந்தல் வளருந் தைலம்.

டில் மோஹினி ஹேர் ஆயில்புட்டி 1க்கு 0-12 0. டஸன் 1க்கு 8-0-0.
ஜாஸ்மின் ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0. டஜன் 1க்கு 8-0-0.
பளவர் பஹார் ஹேர் ஆயில் புட்டி1க்கு 0-12-0. டஜன் 1க்கு 8-0-0.
கமலா ஹேர் ஆயில் புட்டி 1க்கு 0-12-0. டஜன் 1க்கு 8-0-0.

## ஓட்டோ வாஸனை வெஸண்டுகள்.

ஒரு கிராம் கொண்ட சிறியபாட்டல்கள் டஜன் 1க்கு விலை ரூபா 6-0-0

## சந்தன சோப்புகள்.

டஜன் 1க்கு ... ... ரூபா 6-0-0

## சந்தன மரத்தூள்.

பவுண்டு 1க்கு ... ... விலை ரூபா 1-8-0

தங்களுக்குத் தேவையான வாசனைத் திரவியங்களுக்கு உடனே எழுதுங்கள்.

Address:—
K. T. APPANNAH & Co,
Bangalore City.
(Y. 16.) (INDIA).

---

உலகேங்கும்புகழ்பெற்றநற்சாட்சிகள்பெற்றது

## தாதுபுஷ்டிக்குகைகண்ட ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

ஒரு முறை தருவித்துப் பாருங்கள்!!

தாதுபுஷ்டிக்கு இதற்கு நிகரானது ஒன்றுமில்லை. பரீக்ஷைக்கு ஒரே குளிகை போதும்; இழந்துபோன பலத்தை திரும்பக் கோடுக்கும்; நரம்புத் தளர்ச்சியடைந்து வருந்துவோர்க்குத் திவ்விய ஔஷதம். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கோடுத்து ஊக்கத்தை தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150 பில்ஸ் ரு. 10. 50 பில்ஸ் ரு. 4-0-0
20 பில்ஸ் ரு. 2. வி. பி. சார்ஜ் வேறு.

## பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம், உடனே நிற்கும். 1-புட்டி ரு. 2.

## பிளேக் மாத்திரை.

சுரம்கட்டி கண்டவுடனே ஒரு மாத்திரை சாப்பிட்டால் 9 மணி நேரத்தில் சுரத்தை நிறுத்தும்; ஜன்னி தோஷம் வராது. புட்டிக்கு ரு. 2. கட்டிக்கு பிளாஸ்திரி ரு. 1.

T. R. கருப்பண பிள்ளை,
(Q 38.) வைத்தியசாலை, பழனி. S. I.

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— ருதிரோத்காரி௵ ஆடி௴ ௪௳ வியாழக்கிழமை.


## இனியேனும்ஐக்கியமாகவாழலாமே.

"மலை வயிறுநொந்து சுண்டெலியை ஈன்ற"வாறுகச் சிங்களர் தங்கள் சகோதரர்களாகிய தமிழர்களோடும் பறங்கியர் இஸ்லாமான ஏனைய சாதியினரோடும் மாறுபட்டுப் பகீரதப் பிரயத்தனஞ் செய்து பெற்ற பேறு கொழும்பிலே பின்னருமொரு பிரதிநிதிஸ்தானமேயாகும். ஆனால், சிங்களர் தங்கள் மகாசனசபை மூலமாகவும் தங்கள் சனத்தலைவர்களை இங்கிலாந்திற்கு அனுப்பி அதிக பொருளைச் செலவிட்டுச் சிரமப்பட்டும் பெற விரும்பிய பேறு இதுவன்று; தமிழர்கள் பொருட்டுப் பிரத்தியேகமாக உதவப்பட்ட கொழும்பு நகரப் பிரதிநிதிஸ்தானத்தைத் தவிர்த்துவிடல்வேண்டுமென்பதே சிங்களருடைய பெரும் அபேட்சையாக விருந்தது. அதனைக் கேட்க, அரசினர் இதனை யளித்தனர். சிங்களர் இலங்கையிலுள்ள தமிழர் முதலிய மற்றுஞ் சாதியினரோடு தாம் ஐக்கியமாக வாழவேண்டும், இலங்கைக்குச் சுயராச்சியம் பெறவேண்டும் என்ற நன்னோக்கங்களை உண்மையாக மனத்திற் கொண்டிளரேல் இப்பொழுது கொழும்பிற்கு மேலதிகமாகக் கொடுக்கப்பட்ட பிரதிநிதி ஸ்தானத்தோடு திருப்தியடைந்து தமிழ்மக்களுடன் ஐக்கியப்பட்டு இலங்காதேவியின் பொதுநலத்தை விரும்பி உழைக்கத் தலைப்படல் வேண்டும். சிங்களர் தமிழர்களுடனும் மற்றுஞ் சாதியினருடனும் ஐக்கியப்பட்டாற்றான் இந்த ஸ்தானத்திற்கு ஒரு சிங்கள சனத்தலைவரைப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்து சட்டசபைக்கு அனுப்புதல்முடியும். இல்லையேல் தமிழர்களும் மற்றுமுள்ள சாதியினருஞ் சேர்ந்து சிங்களரல்லாத இன்னொரு வகுப்பினரைச்சேர்ந்த ஒரு சனத்தலைவரைப் பிரதிநிதியாக அனுப்புதலும் முடியும். ஆனல் தமிழருக்கேனும் பறங்கியர் இஸ்லாமானவர் ஐரோப்பியரென்ற மற்றைச் சாதியினருக்கேனும் சிங்களருக்குமாறாக ஒருபிரதிநிதியைத் தெரிந்து இந்தப் புதிய ஸ்தானத்திற்கு அனுப்பும் நோக்க மில்லையெனலாம். இப்படியிருத்தலினல் சிங்களசாதியார் தம் சாதியின் நன்மையை விரும்பியும் இலங்கையின் பொதுநன்மையை விரும்பியும் தமிழர் முதலிய ஏனைய வகுப்பினரோடு ஐக்கியப்பட்டு வாழுதல் உசிதமாகும்.

ஆனல், இங்கிலாந்திலே இப்பொழுது நிற்கும் சிங்கள சனத்தலைவர்கள் இவ்வளவிலே திருப்திப்படாமல், தமிழர்கட்கும் மற்றும்வகுப்பினருக்கும் பிரதிகூலமாகவும் தங்களுக்கு அனுகூலமாகவும் சில சிலாக்கியங்களைப் பெறுதற்காக அங்குள்ள அரசினருக்கு இன்னுமொரு விண்ணப்பப்பத்திரம் உதவும் நோக்கமாக நிற்கின்றார்களென நாங்கள் அறியலானோம். அது உண்மையாகவிருப்பின் சிங்களர் இலங்கையின் ஈடேற்றத்தை விரும்பின சாதியினால்லரென்பது நிச்சயமாகப் பெறப்படும். இங்கிலாந்தில் நிற்கும் சிங்கள சனத்தலைவர் செய்யவேண்டிய பிரதான முயற்சியொன்றுளது. அஃதென்னவென்றால், சட்டநிரூபணசபையிலே பல புதிய திருத்தங்கள் நிகழ்ந்திருக்கின்றனவேயன்றிச் சட்ட நிருவாகசபையில் இதுவரையில் யாதும் திருத்தம் நிகழவில்லை யென்பதாம். இது பழைய சாடியும் புதிய மூடியும் போலவிருக்கின்றது. சட்ட நிருவாக சபையையுந் திருத்த வேண்டுமென்ற முயற்சியிற் சிங்களர் தலையிடுவரேல் தமிழர் முதலிய ஏனைய சாதியினரும் அம்முயற்சிக்குத் துணையாக நின்று உழைப்பர். சிங்கள தமிழர் ஐக்கியமும் உண்டாகும். பெருந்தொகைப் பணம் செலவிட்டும் பெரிதுஞ் சிரமப்பட்டும் சிங்கள சனத்தலைவர் இங்கிலாந்திற் சென்று அங்கே செய்த முயற்சிக்குத் தகுந்த பயனும் அதுவேயாகும்.

ஆதலினலே சிங்கள சனத்தலைவரும் சிங்களருக்குச் சார்பாக நின்று தமிழருடன் மாறுபட்டுத் தமிழர்களை நிந்தித்த சில தமிழ்மக்களும் இந்தச் சந்தர்ப்பத்திலாயினும் தமிழ் சிங்கள ஒற்றுமையின் பொருட்டு உழைத்தல்வேண்டும். அவ்வணம் உழைப்பரேல் ஒருபோது சுயராச்சியத்தை இலங்கைவாசிகள் பெறவுங் கூடும்.

## யாழ்ப்பாணப் புகையிலைத்தீர்வை.

ஏறக்குறைய ௫0 வருட காலமாக, திருவாங்கூருக்கு அனுப்பப்பட்டுவந்த யாழ்ப்பாணம் புகையிலைக்கும் இந்தியாவிலுள்ள கோயம்புத்தூர்ப் புகையிலைக்கும் தீர்வை விஷயமாக யாதும் பேதமின்றி ஒரு கண்டிக்கு ௯0 ரூபாவே விதிக்கப்பட்டிருந்தது. ஆனல் ௧௮௯௯-ம் ஆண்டிலும் பின்னர் ௧௯௧0-ம் ஆண்டிலும் திருவாங்கூர் அதிகாரிகள் அங்கு அனுப்பப்பட்ட யாழ்ப்பாணப் புகையிலைக்கும் கோயம்புத்தூர்ப் புகையிலைக்கு மிடையே தீர்வை விஷயமாகச் சிலபேத முண்டாக்க முயன்றும் அது அனுகூலமுறு தொழிந்தது. ௧௯௨௧-ம் ஆண்டு யாழ்ப்பாணம் புகையிலை ஒரு கண்டிக்கு ௨0 ரூபாவும் கோயம்புத்தூர்ப் புகையிலைக்குக் கண்டி ஒன்றுக்குப் பத்து ரூபாவும் தீர்வைவிஷயமாக உயர்த்தப்பட்டன. இதனலே கோயம்புத்தூர்ப் புகையிலையிலும் பார்க்க யாழ்ப்பாணம் புகையிலைத் தீர்வை விஷயமாக, ௧0 ரூபா கூடியிருந்தது. கண்டி ஒன்றுக்குப் பத்து ரூபா கோயம்புத்தூர்ப் புகையிலைக்குத் தீர்வை குறைந்திருந்தமையினல் திருவாங்கூரில் கோயம்புத்தூர்ப்புகையிலையே அதிகஞ் செலவாக, அங்குள்ள புகையிலைத் தோட்டக்காரரும் வியாபாரிமாரும் லாபமுற, யாழ்ப்பாணத்துப் புகையிலைத் தோட்டக்காரருக்கும் வியாபாரிமாரும் தங்கள் புகையிலைக்குத் தீர்வை கூடியமையினற் செலவழியாதொழிய அதிக நஷ்டமடையலானர்கள். யாழ்ப்பாணத்துள்ள புகையிலைத் தோட்டக்காரருக்கும் வியாபாரிமாருக்கும் நேர்ந்த நஷ்டத்தையுணர்ந்த யாழ்ப்பாணச் சங்கத்தார் இக்குறையை நமது தேசாதிபதியாகிய ஸேர் வில்லியம் மனிங் அவர்களுக்கு விண்ணப்பஞ் செய்ய, அவர் யாழ்ப்பாணப் புகையிலைக்கும் கோயம்புத்தூர்ப் புகையிலைக்கும் தீர்வை விஷயமாகப் பேதமிருக்கவொண்ணதென்று சென்னைத் தேசாதிபதிக்கு ஒரு நிருபம் அனுப்பினர். திருவாங்கூர் மந்திரியின் அபிப்பிராயத்தை ஆதாரமாகக்கொண்டு சென்னைத் தேசாதிபதி இலங்கைத் தேசாதிபதிக்கு இத்தீர்வை விஷயமாக எழுதியகடிதம் யாழ்ப்பாணப்புகையிலைவியாபாரிகட்கும் தோட்டக்காரருக்குஞ் சகாயமாகவிருக்கவில்லை. இந்த விஷயமாக அதிக சிரமத்துடன் உழைத்தவர் ஸ்ரீமாந் சபாபதியவர்களாதலால், திருவாங்கூர் மந்திரியின் பதிலும் சென்னைத் தேசாதிபதியின் பதிலும் ஸ்ரீமாந் சபாபதியவர்களுக்கே அனுப்பப்பட்டன. ஸ்ரீமாந் சபாபதியவர்கள் இந்த நிருபங்களையும் படித்து இன்னும் வேண்டிய ஆராய்ச்சி செய்தபின், இத்தீர்வை விஷயமாக இன்னுமொருமுறை பிரயத்தனஞ் செய்யவேண்டுமென்று தக்க ஆதாரங்களையெடுத்துக் காட்டி நமது தேசாதிபதியவர்கட்கு ஒரு நிருபமனுப்பினர். தேசாதிபதியின் விருப்பத்திற் கிணங்கி, வடமாகாண ஏஜன்றரும் ஸ்ரீமாந் சபாபதியவர்களும் ஸ்ரீமாந் இராமலிங்க முதலியாரவர்களும் ஸ்ரீ ஏகாம்பரமவர்களும் இந்த ஜூலாய்௴ இரண்டாந்தேதி இங்கிருந்து புறப்பட்டுத் திருவாங்கூருக்குச் சென்று ஆலப்பள்ளி திருவனந்தபுரம் முதலிய இடங்களை யடைந்து அங்குள்ள சில உத்தியோகத்தர்களின் உதவியையும், சில புகையிலைத் தரகர்களின் உதவியையுங் கொண்டு விஷயங்களை நன்கு விசாரணை செய்தனர். அதன்பின்னர் இந்த ஜூலை மாசம் ௧௧-ந் தேதி திருவாங்கூர் மந்திரியும் இங்கிருந்து சென்ற நால்வரும் இத்தீர்வை விஷயமாகக் கலந்து பேசினர். இதுவுமன்றி வடமாகாண ஏஜன்றரவர்களும் ஸ்ரீமாந்.சபாபதியவர்களும் திருவாங்கூரிலுள்ள ஆங்கில பிரதிநிதியுடனும் இவ்விஷயமாகப் பேசியிருக்கின்றனர். இப்புகையிலைத் தீர்வை விஷயமாக யாதும் நன்மை யுண்டாகு மென்பதே அங்கு சென்று வந்தவர்களின் அபிப்பிராயமாகும்.

## இது சரியல்லவே.

வண்ணார்பண்ணை மேற்கிற் சிலவாரங்களாக, கிறிஸ்து மதத்தைப் போதிக்கும் பெண்கள் சிலர் சைவர்கள் வசிக்கும் வீடுகளுட் பிரவேசித்து, அங்குள்ள பெண்பாலர்க்குக் கிறீஸ்துமத போதனையும் சைவ நிந்தனையுஞ் செய்யத் தலைப்பட்டிருக்கின்றனரென்றும், யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாராற் சைவத்தைப் பரிபாலித்தற்கென ஸ்தாபித்து நடத்தப்பட்டுவரும் இவ் இந்துசாதன பத்திரிகை அந்தப் போதனைமாதர் செயலைக் கண்டியாதிருத்தல் முறையல்லவே என்றும் கருத்தமைய சைவசமய அபிமானியொருவர் ஒரு கடிதமெழுதி இப்பத்திரிகையில் வெளியிடும்படி எமக்கு அனுப்பியிருக்கின்றனர். அக்கடிதத்தே விரவியிருக்குஞ் சில கடுஞ் சொற் பிரயோகம் பற்றி அதனை இங்கு வெளியிடாதொழிந்தேம். ஆனற் கடிதர் கூறுங்குறை உண்மையோவென யாம் ஆராயப்புகுந்த சமையத்தில் அது உண்மைதான் என்பது பிரத்தியக்கமாக அறியத்தக்கதாக விருக்கின்றது. ஒரு அயிரோப்பிய பெண்ணும் வேறு சில சுதேச கிறிஸ்த பெண்களும் இங்குவந்து சிற்சிலவீடுகளிற்பிரவேசித்து கடித நண்பர் தெரிவித்துள்ள பிரகாரம் செய்தலை யாம் நேரிற் கண்டுள்ளேம். இப்போதனைப் பெண்கள் சைவசமயத்தவர் வீடுகளிற் செல்லும்போது அங்கு யாராயினும் ஆடவர்களிருந்தால் அவர்கள் வந்தவர்கள் பெண்பாலார் என்னுங் காரணம்பற்றி வாளாவிருந்துவிடுகின்றார்கள்; இல்லையேல் அப்புறஞ் சென்றுவிடுகின்றார்கள். இச்செயல் ஆங்குச் செல்லும் பெண்களுக்கு அதிகவசதியை ஆக்கிவிட, அம்மாதர் தம்மனம் போனவாறே தஞ் சமயத்துக்கு மெய்ஞ்ஞானமும் சைவசமயத்துக்கு அஞ்ஞானமுங் கற்பிக்கத் தலைப்பட்டுக்கொண்டனர். வீட்டிலுள்ள பெண்பாலார் வீடுதேடி வந்தவர்களை உபசரிக்க வேண்டுமென்னும் நியதிபற்றி இவர்களை உபசரிக்க, இவர்கள் அதனை விபரீதமாக விளங்கி இடர்ப்படுகின்றனர். "சத்துருவும் தம் வீட்டிற்கு வந்தால், சாதுக்கள் அவனுக்குச் சன்மானஞ் செய்வார்கள்; மரம் தன்னை வெட்டுகிறவனுக்கும் நிழலைக் கொடுக்கின்றது" என்னுங் கருத்தமைந்த வாக்கியம் பஞ்சதந்திரத்திலிருத்தல் உண்மையாயினும் சமய நிந்தை விஷயத்தில் அதனைக் கைக்கொள்ள வொண்ணது; சைவரா யுள்ளவர்கள் எக்காலத்திலாயினும் அந்நிய மதத்தினர் இல்லந்தோறும் புகுந்து அவர் மதத்தைக் கண்டித்துத் தம்மதத்தை நாட்ட முயல்கின்றார்களா? இல்லையே. அங்ஙனமாக, ஞானப்பிரகாசர் முதலிய கத்தோலிக்க சமயபோதகர் சிலரும், இங்கே சொன்ன பெண்கள் போன்றசிலரும் முறையே பலாத்காரமாகத் தங்கள் சமயத்தைச் சைவர்கட்குப் போதிக்க முயன்று மனஸ்தாபத்தையும் சிற்சில காலத்திற் சமயக் கலகத்தையும் சாதிக் கலகத்தையும் உண்டாக்கிவிட வேண்டிய காரணந்தானென்னையோ? வண்ணார்பண்ணை முதலிய இடங்களிலே இப்போதனைப் பெண்களுடைய எண்ணம் பலிக்காதென்பதை அப்பெண்கள் நன்றாய் அறிந்துகொள்ளக்கடவர். கிறிஸ்துமார்க்கத்தவர்களென்றிருப்பவர்களுட் சிலர் போலிக் கிறிஸ்தவர்களாகவிருக்கின்றார்கள்; இப்பெண்கள் தங்கள் போதனையினல் அவர்களை உண்மைக் கிறிஸ்தவர்களாக்கிவிட்டு அப்புறம் இயலுமேல் இக்கருமத்தைச் செய்ய முயலலாகுமே! வீண் விவாதங்கட்கும் மனஸ்தாபத்திற்கும் இப்பெண்கள் காரணராயிராதொழிதல் நன்மையாகும். இவர்கள் செயல் கொல்லத்தெருவில் ஊசிவிற்க முயலுதலையொக்கும்.

## கதிர்காமயாத்திரைகாரரும் புகைரத வசதியீனமும்.

இந்த ஜூலாய்௴ ௯௳ தொடக்கம் இரண்டுவார காலத்திற்கு, கதிர்காம மகோற்சவத்திற்குச் செல்லும் யாத்திரைகாரர், போகிற செலவுடனே புகைரதத்திற் போய் மீண்டுவரலாகும் என்னும் பிரமாணம் இருத்தலினலே இந்த யாழ்ப்பாணத்திலிருந்து ஆயிரக் கணக்கான சனங்கள் கதிர்காம யாத்திரையின் பொருட்டுச் சென்ற திங்கட்கிழமை தொடக்கம் புறப்பட்டுச் செல்கின்றார்கள். யாத்திரைகாரர் ஒரே செலவிற் போய்வர ஒழுங்கு செய்த புகைரத அதிகாரிகள் அப்பிரயாணிகள் வசதியாகப் பிரயாணஞ் செய்தற்கான ஒழுங்குகளை ஏற்படுத்திலரல்லர். சென்ற திங்கட்கிழமை மாலை பன்னூற்றுக்கணக்கான யாத்திரைகாரர் யாழ்ப்பாணப் புகைரத ஸ்தானத்திற்குச் சென்று புகைரதச் சீட்டுப் பெற்றுக்கொண்டு புகைவண்டியிலே இடமின்மையினற் படக்கூடிய கஷ்டங்களெல்லாம் பட்டுக்கொண்டு பிரயாணஞ் செய்யலானர். புகைரத ஸ்தானத்திற் சென்ற யாத்திரைகாரருள் ஆண்களும் பெண்களும் சிறுபிள்ளைகளுமாக ஏறக்குறைய நூற்றுக்கு இருபதைந்துபேர் வீதம் புகைரதத்தில் இடமில்லாமையால் அன்று பிரயாணஞ்செய்யாது தங்கள் தங்கள் வீடுகளுக்கு மீண்டு செல்வாராயினர். இவர்கள் அன்று பிரயாணஞ் செய்யாவிட்டாலும் அடுத்த அடுத்த நாட்களிற் செல்வார்கள் என்று வைத்துக்கொள்வோம். ஆனல் அன்று பிரயாணஞ் செய்யாமல் நின்று பின்னர்ப் போவதால் இவர்களுக்கு நேரக்கூடிய இடைஞ்சல்கள் பல. பிரயாணமாகப் புறப்பட்டு உடனே மீண்டு வீட்டுக்கு வரவொண்ணதென்னுங் கொள்கை நம்மவர்களிடத்துண்டு. உடனே மீளநேரிட்டமையினலே இந்தக் கொள்கைக்குப் பங்கம் ஏற்பட்டுவிட்டது. இனி யாழ்ப்பாணப் புகைரத ஸ்தானத்திற்குப் பத்து மைல் தூரத்திலிருந்தும் பிரயாணிகள் வந்து புகைரதமேறிச் செல்லவேண்டியவர்களாயிருக்கின்றார்கள். இவர்களுட் பலர் புகைரதமேற வசதியின்மையினலே யாழ்ப்பாணத்திலேயே அன்று தங்கி மறுநாளும் நின்றமையாற் பெருங் கஷ்டப்பட்டார்கள். இனி யாழ்ப்பாணப் புகைரத ஸ்தானத்திலேயே அன்று இடமில்லாமையாற் பலர் எஞ்சி நின்றார்களென்னில் அதற்கப்பாலுள்ள சாவகச்சேரி கொடிகாமம் முதலிய ஸ்தானங்களில் நின்றவர்கள் எத்தனைபேர் அன்று பிரயாணஞ் செய்யாது தடைப்பட்டு நின்றிருப்பர்? இவர்களுள் கொடிகாமப் புகைரத ஸ்தானத்திற்கு வருபவர்கள் வல்லுவெட்டித்துறை பருத்தித்துறை முதலிய தூரமான இடங்களிலிருந்து வருபவர்களன்றோ? இவர்கள் அன்று புறப்பட முடியாவிட்டால் கொடிகாமத்தில் ஒரு இரவு தங்கியே செல்லவேண்டியிருக்கும். இது இவர்களுக்குப் பெரும் நஷ்டமல்லவா? புகைரதஸ்தானத்துள்ள உத்தியோகத்தர் வழக்கத்திற்கு அதிகமான பிரயாணச் சீட்டுகளை விற்கும்போது புகைரதப்பெட்டியில் மேலதிகமான இடமும் வேண்டுமென்பதை நினைப்பதில்லைப்போலும். உற்சவகாலங்களில் புகைரதப் பிரயாணிகள் புகைரதத்தில் இடமின்றிக் கஷ்டப்படுதலை இந்தப்புகைரதஸ்தான அதிகாரிகள் முன்னரும் பலமுறை தங்கள் அனுபவத்திற் கண்டிருக்கின்றார்களன்றோ! கண்டுகொண்டும் பின் இப்படியிடர்ப்பட வேண்டிய காரணமென்ன! உற்சவகாலங்களிற் புகைரதத்தில் இடமின்மையாற் பிரயாணிகள் கஷ்டப்படுகின்றனரென்ற விஷயம் சென்றவருடம் சட்டநிருபணசபைக் கூட்டமொன்றிற் சனப்பிரதிநிதி யொருவராற்பேசப்பட்டபோது அக்காலத்திற் புகைரதத் தலைவராயிருந்த கிறீன்துரை இனிமேல் அவ்வாறன வசதியீனங்கள் பிரயாணிகளுக்கு ஏற்படா வண்ணம் ஒழுங்கு செய்யப்படுமென்று சொல்லியிருந்தார். ஆனல் இப்பொழுது அப்படிச் செய்யப்படவில்லையே. குறித்த திங்கட்கிழமைமாத்திரமன்று. அடுத்த நாட்களிற்செல்லும் பிரயாணிகளும் புகைரதத்தில்இடநெருக்கங்காரணமாக அதிக கஷ்டப்பட்டே செல்கின்றார்கள். பெட்டிகள் இங்கு இல்லாவிட்டால் முந்தியே சில புகைரதப்பெட்டிகளை இங்குதருவித்து பிரயாணிகளைவசதியோடு பயணஞ்செய்ய ஒழுங்குசெய்வதற்கு அதிகாரிகளுக்கிருக்கும் வசதியீனமென்னவோ? இந்த இலங்கையிலே விசேஷமாக யாழ்ப்பாணத்திலே பிரயாணிகளின் வசதிக்காகப் புகைவண்டி யோடுங்காலம் எப்பொழுது வருமோ யாமறியேம்.

---

பத்திரிகாபிமானிகள் தங்ளால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைப்பார்களாக

## உலகம் பலவிதம்.

"சற்று முன்பாக உம்முடைய விஷயத்தைப்பற்றி யோசித்தேன்; நீரும் வந்துவிட்டீர்; நல்லது, அப்படி உட்காரும்" என்று உபாத்தியாயர் சொல்ல, விசுவேசன் அயலே வைக்கப்பட்டிருந்த ஒரு வாங்கின்மீது அமர்ந்தான். "தம்பி, நீர் 'லா' (சட்டக் கல்வி) படிப்பதுதான் நல்லது" என்றார் உபாத்தியாயர். விசுவேசன் "ஐயா, நியாயதுரந்தரர்கள்தாம் இக்காலத்திலே மிக அதிகமாக விருக்கின்றார்கள்; அவர்களுக்குப் பிழைப்பு மிகக் குறைவு; எங்கேனும் நூற்றுக்கொருவர் தான் திறமையுடன் கடமைபார்த்துவருவும் பொருளீட்டிக் கொள்கிறார்; எத்தனையோ பேர் சட்டை தொப்பிக்கு முட்டுப்படுகிறார்கள்; இன்னும் எத்தனையோ பேர் தாம் வருஷந்தோறும் கோட்டிலே கட்ட வேண்டிய பணத்திற்குத் தட்டுக்கெடுகிறார்கள்; இன்னுமெத்தனையோ பேர் நிக்ஷோ முதலியவற்றிற்கு இடர்ப்படுகின்றார்கள்; மற்றுமெத்தனையோ பேர் வேலையற்று வீட்டிலிருக்கின்றார்கள்; ஒழிந்த எத்தனைபோ பேர் தங்கள் தொழிலுக்குரிய கௌரவத்தைக்காக்க வகையின்றிக் கஷ்டப்படுகின்றார்கள்; சிலர்வேறுபிழைப்புப் பார்க்கின்றார்கள்; இயல்பிலேயே திறமையுள்ள சிலர் அன்றும் இன்றும் என்றும், மரியாதையோடு காலங் கழிக்கின்றார்களென்பதை நான் மறுக்கவில்லை; இவற்றையெல்லாம் நாம் நேரிற் கண்டு

கொண்டும் அந்தத் தொழிலிற் பிரவேசிக்கலாமா சொல்லுங்கள்" என்று ஆசிரியரைக் கேட்டான்.

* * *

ஆசிரியர் "அப்பனே நீ சொல்வதும் உண்மைதான்; ஆனால் ஒரு விஷயத்தை நீ சிந்திக்கவேண்டும்" அத்தொழில் சுவதந்திரமுள்ள தொழிலாகும்; அதிக திறமையுடன் தம் கடமையைப் பார்க்கும் நியாயவாதிகள் மிக்க பொருளும் புகழும் படைத்தவர்களாகவிருக்கின்றார்கள்; அப்படிப்பட்டவர்கள் அநேக பரோபகாரமான செயல்களைச்செய்திருக்கின்றார்கள்; தங்கள் தேசத்தின்பொருட்டுப் பாடுபட்டு அழியாப் புகழை ஈட்டிக்கொண்டார்கள்; நியாயவாதிகள் முயற்சியில்லாதவர்களாயிருந்தாலும் வருவாயில்லாதவர்களாகவிருந்தாலும் உலகத்திலே அவர்களுக்கு ஒருவகையான நடப்பு உண்டு; நியாயவாதப் பரீக்ஷையில் அவர்கள் சித்தியடைந்தவுடனே அவர்கள் பெருந்தொகைச் சீதனத்துடன் தக்க இடத்திலே பெண்ணெடுக்கத் தகுந்தவர்களாகின்றார்கள்; நாகரீகமுற்ற பெண்மணிகளும் தங்களை அப்புக்காத்துபெண்சாதி; பிரக்கிராசியார் பெண்சாதி யென்று மற்றவர்கள் சொல்லத் தாங்கள் வாழவேண்டுமென்று விரும்புகிறார்கள்; எத்தனையோ பெற்றார்கள் தாங்கள் அப்புக்காத்துப் பிரக்கிராசிமாருக்கு மாமன்மாமியராகவிருக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள்; இந்நியாயவாதிகளும் சீதனப்பொருளைத் தம் சொந்தப் பொருளாகவேமதித்து நடந்துகொள்கிறார்கள்; நியாயவாதிகளில்லாப் பிரசித்த கூட்டங்கள் கிடையா; அவர்களில்லாச் சங்கங்கள் சபைகள் கிடையா; பட்டின பரிபாலன சங்கம் சுகாதாரசங்கம் சட்டநிரூபணசபை என்னுமிவைகள் தாமும் அவர்களின்றி நடைபெறா; சனத்தலைவர்களாக வந்திருப்பவர்களுட் பெரும்பாலார் அவ்வகுப்பினரேயாவர்; எந்தஇடத்திலும் தலைமைஸ்தானம் வகிப்பவர் அவர்களேயாவார்கள்; அவர்கள் தங்கள் சொல்வன்மையினால் நடந்த கருமத்தை மறைக்கவும் நடவாத கருமத்தை நிலைநாட்டவும் முயல்வதினாலே அவர்களைப் பொய்யைச் சாதிப்பவரென்று சிலர் சொல்வது மெய்யாகும். அவர்கள் எடுத்த கருமத்தைச் சாதிக்க முயல்வதினால் அவர்கள் கூற்றில் நம்பிக்கையில்லாதவர்கட்கு அது பொய்போலவே தோன்றும்; அதனை நாங்கள் முற்றாகப் பொய்யென்று சொல்லக்கூடாது; மேலும் மற்றுந் தொழிலாளர்கட்கு விலக்கப்பட்ட சில செயல்களை அவர்கள் செய்தாலும் உலகம் அச்செயல்கள் காரணமாக அவர்களைக்குறைகூறாது; நியாயப் பிரமாண மறிந்தவர்கள் தகாதன செய்யாரென்ற ஒரு நம்பிக்கை அவர்கள் விஷயத்தில் உலகத்தார்க்கு உண்டு; அவர்கள் இல்லாவிட்டால் உலகத்திலே வியாச்சியங்கள் குறைந்துபோய்விடும்; நீதிஸ்தலங்கள் சிறப்படையா; அவர்கள் தம் நயங்கருதியோ பிறர் நயங் கருதியோ இன்றேல், தம் நயத்தையும் பிறர்நயத்தையுங் கருதியோ பொது நன்மைகள் சிலவற்றைச் செய்துவிடுகின்றார்கள்; இவை மாத்திரமன்றி, அவர்கள் தொழில் பெரிதும் சுவாதீனமான தொழிலென்பதையாயினும் நீர் மனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்" என்று ஆசிரியர் பின்னருஞ் சொல்லத் தொடங்கினர்.

* * *

இதற்கிடையில் விசுவேசன் இடையிலெழுந்து "தங்கள் வார்த்தைக்கு எதிர்வார்த்தை சொல்லுகின்றேனென்று என் மீது குறைகூறுதீர்கள்? அவர்கள்தொழில் எப்படிச் சுவாதீனமுள்ள தொழிலென்று சொல்லத்தக்கதாகும்; உண்மையாக ஒரு குற்றஞ் செய்தவனிடத்திலும் அவர்கள் கைநீட்டிப் பொருள் வாங்கிக்கொள்வரேயானால், பின்னர் தாம் பொருள் வாங்கிய பட்சத்தார் பொருட்டுப் பொய்யை மெய்யாகவும் மெய்யைப் பொய்யாகவும் திரித்துச் சாதிக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்களே; கையைநீட்டிப் பணம் வாங்கியவுடனே இவர்கள் சுவதந்திரம் ஒடுங்கிவிடுகின்றதே; 'ஆற்றங் கரையின் மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம், உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர், பழுதுண்டு வேறோர் பணிக்கு' என்ற பிரகாரம் விவசாயம் ஒன்றல்லவா சுவதந்திரமுடைய தொழிலென்று சொல்லப்படத் தக்கது" என்று சொல்லுதலும், ஆசிரியர் "விவசாயம் கைத்தொழில் என்னும் இத்தொழிலுக்கு நியாயவாதமும் மற்றும் எத்தொழிலும் ஈடல்ல; உண்மையான சுவதந்திரத்தை நீ விரும்புவதாகவிருந்தால், விவசாயக் கல்வியையேனும் கைத்தொழிற் கல்வியையேனும் பயின்றுகொள்" என்றார். மாணாக்கன் அவ்விருதொழில்களுள் எதுவொன்றைப் பயில முயலுவேனென்று சொல்லி ஆசிரியரிடம் விடை பெற்றுக்கொண்டு சென்றான்.

## இந்துசாதனம்.

நமது இந்துசாதனம் வாரமிருமுறை வெளிவருவதைக்குறித்து, கொழும்பிலிருந்து வெளிவரும் "தேச நேசன்" பத்திரிகை (17-7-23) கூறியது:

"இந்துசாதனம் யாழ்ப்பாணத்தினின்றும் வாரப்பத்திரிகையாகச் சுமார் ௩௦ வருஷங்களுக்கு மேலாகவே வெளிவந்திருக்கும் இப்பத்திரிகை இம்மாதந் துவக்கம் வாரம் இருமுறைப் பதிப்பாக வெளிவருவதைக் குறித்து சந்தோஷமடைகின்றோம். சென்ற ௩௦ வருஷகாலத்திற்குமேலாகவே ஒரு பத்திரிகை விரிவின்றி ௪ பக்கங்களுடன் வெளிவருவதென்பதைக் கேட்கும்நமக்கு, அப்பத்திரிகையில் இந்துக்கள் அபிமானங் காட்டாமல் இருந்துவந்திருக்கும் நிலைமையைப்பற்றி நாம் என்ன சொல்வது தங்கள் தங்கள் சந்தாப் பாக்கிகளையாவது கொடுத்து உதவலாகாதாவென அப்பத்திரிகையின் தலைவர் அடிக்கடி எழுதுவதை நாம் கண்டிருக்கிறோம். இந்நிலைமை எதைக் காட்டுகிறது: இந்துக்களுள் மதப்பற்றும் சாதிப்பற்றும் இல்லையென்பதையே.

சென்ற ௩௦ வருஷ காலத்திற்குமேல் ஓர் பத்திரிகை உயிர்பெற்றிருப்பதினால் அத்தகைய பத்திரிகை உயிர்பிழைத்திருக்கவேண்டியதன் அவசியத்தைக் காட்டவில்லையா? யாழ்ப்பாணத்திலும் மற்றுமுள்ள பாகங்களிலும் இந்துக்களில் பணம் படைத்தவர்கள் இல்லாமற்போய்விடவில்லை. அவர்களுள் பலர் பட்டம் பெறுவதற்கும் வேறுபல உபயோகமற்ற விஷயங்களிலும் வேலைசெய்ய, பணச் செலவு செய்யவில்லையா? இத்தகைய பிரபுக்கள் தங்களுக்கு வரும் பத்திரிகைகளுக்குச் சந்தாக் கொடுக்காமல் இருப்பதுந் தவிர, தங்களுடைய பணத்தைப் பெரிதாகக் கருதி இனாமாகப் பத்திரிகை யனுப்பப்படுகிறது என எண்ணுகிறார்கள். இந்நிலைமைகாரணமாகவே பல தமிழ்ப் பத்திரிகைகளும் மயங்கிக்கிடக்கின்றன. நமது இந்துசாதனம் எவ்வளவோ நன்மையைச் செய்துவந்திருக்கிறது. அது வாரம் இருமுறைப் பதிப்பாக வெளிவருவதால் இன்னும் அதிக நன்மை விளையுமென்பதற்கையமில்லை. வேண்டுவோர்:—மானேஜர், இந்துசாதனம், யாழ்ப்பாணம் என எழுதவும்".

## சமாசாரம்.

தமிழ் உபாத்தியாயர் சங்கம்:—உபாத்தியாயர் சங்கமொன்றை ஸ்தாபிக்கும் நோக்கமாக, வலிகாமப் பிரிவிலுள்ள உபாத்தியாயர்களின் கூட்டமொன்று இந்த ஜூலைமீ 13ந வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் தெல்லிப்பழை மிஷன் விடுதிப்பாடசாலை மண்டபத்திற் கூட்டப்பட்டது.

ஆனையிறவில் உப்புவிற்பனவு:—ஆனையிறவு உப்புப்பாத்தியிற் சென்ற ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஒரு அந்தர் உப்பு மூன்று ரூபாவாக விற்கப்படுகின்றது. உப்பு வாங்குபவர்கட்கு அவ்வுப்பு, பாத்தியிலிருந்து ஆனையிறவுப் புகைரதம் தங்கிநிற்கு மிடம்வரைக்கும் அரசினர் செலவிலேயே கொண்டுவந்து கொடுக்கப்படும்.

சோரமாகக் கஞ்சா விற்றவர் அபராதம் விதிக்கப்பெற்றமை:—சென்றவாரம் வைத்தியலிங்கமென்னும் ஒருவர் மூன்று ரூத்தல் நிறையுள்ள கஞ்சாவைக்கொண்டு வல்லைவெளி மார்க்கமாகப் போகும்போது மதுபரிபாலனப் பரிசோதகர் ஸ்ரீ E. P. இராசையா என்பவராற் கஞ்சாவுடன் பிடித்துக் கோட்டில் ஒப்பிக்கப்பட்டனர். நீதிபதி அவரை விசாரணை செய்து 300 ரூபா அபராதமிறுத்தல்வேண்டும்; இல்லையேல் 6 வாரச் சிறையிருத்தல்வேண்டுமென விதித்தனர்.

யாழ்ப்பாணச் சுப்பிறிங்கோட்டுவிசாரணை: விநாயகர்வல்லிபுரமென்பவர்மீது கொலைக்குற்றஞ் சாட்டப்பட்டிருந்த வழக்கு விசாரிக்கப்பட்டு எதிரி நிரபராதியென விடுதலையடைந்தார். இந்த வியாச்சியத்திற் சாட்சி சொல்லும்படி வந்த இருவர் பொய்ச்சத்தியஞ்செய்த குற்றத்திற்காகத் தனித்தனி 20 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றனர். அதன்பின் மணியர் சின்னவர்மீது கொலைகுற்றம்பாரிக்கப்பட்டிருந்த வழக்கு விளங்கப்பட்டு எதிரிக்கு 8 வருடக் கடுஞ்சிறை விதிக்கப்பட்டது.

நவாலி'சைவசமயப் பாதுகாப்புச்'சபை:- இப்பெயர்பூண்டசபையொன்றை, நவாலி சைவமக்கள் சென்றமாதம் ஆரம்பித்திருக்கின்றனர். கிறிஸ்தபோதக குருமார் நவாலியிற்சென்று விளைத்தகலகங்களினால் மேற்படி போதகர்கள் மீது சூறுவழக்குகள் தொடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வழக்குகளுக்குவேண்டும் செலவுகளுக்குப்பணம் சேர்ப்பதற்காகவே மேற்கூறிய சைவபாதுகாப்புச் சபை ஆரம்பிக்கப்பட்டது. பிறவூர்களிலே உத்தியோகங்களிலமர்ந்திருக்கும் நவாலிசைவமக்கள் சமயாபிமானம் தேசாபிமானம் என்றுமிவற்றைக் கடைப்பிடித்து மேற்குறித்த சபைக்குத் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவிசெய்து தங்கள் தேசத்திலும், சமயத்திலும் மெய்யன்பு பாராட்டுவார்களாக. இச்சபையாரது முயற்சி அநுகூலமடைய நவாலி அட்டகிரிக்கந்தன் திருவருள் புரிவாராக.

கடித.

தலைமைக்காரரின் அயோக்கியம்:—குருநாக்கற்பகுதியிலே 150ரூபா விலையுள்ள கருங்காலி மரத்தை முடிக்குரிய காட்டிலிருந்து திருடிச் சென்ற பண்டா ஆராச்சி, அப்புஹாமி விதானையார், இன்னுமோர் சிங்களவன் யாவரும் விசாரணை செய்யப்பட்டுத் தனித்தனி 100 ரூபா அபராதம் விதிக்கப்பட்டனர்.

ஓர் முதலை:—களுத்துறையில் அரசினர் சாராயம் வடிக்குஞ் சாலையின் சமீபத்திலே 25 அடி நீளமுள்ள ஓர் பெரும் முதலை, ஓர் இறந்த எருமைமாட்டைக் காலைப்போசனமாக அருந்திக்கொண்டிருந்தது. உதவிச் சுப்பெறின்டெண்டான மிஸ்டர் லங்கிறான் அதனைச் சுட்டனர். அது ஆற்றிற் குதித்துவிட்டது.

ஓர் விதானையாரின் கொலை:—குருநாக்கலைச் சேர்ந்த அனுராஜபுத்தையிலுள்ள விதானையாரான முதலிஹாமி என்பவர் வீட்டுக்கு புஞ்சிபண்டா என்பவனின் ஆடுமாடுகள் சென்று அங்குள்ள சில பொருட்களை அழித்துவிட்டது. இதனால் எழுந்த வாக்குவாதங் காரணமாகப் புஞ்சிபண்டா விதானையாரைக் கொலைசெய்துவிட்டான்.

கடுகணுவைப் புகைரத விபத்து:—சில மாசங்களின் முன்னே கடுகணுவையில் நடந்த புகைரதப் பெரும் விபத்தையிட்டு, புகைரதச் சாரதியாகிய மிஸ்டர் ஹில் வேலையினின்றும் நீக்கப்பட்டார். இப்போது தேசாதிபதியவர்கள் அவருக்குத் திரும்பவும் வேலை கொடுக்கத் தீர்மானித்துவிட்டார். ஆனால் மிஸ்டர் ஹில் இனிமேல் திருப்தியைக் கொடுக்கும் விதமாகக் கடமை பார்த்து வரவேண்டுமாம்.

புகைரதப் பாதை:—வதுளைப் புகைரதப் பாதை வேலை ஏறத்தாழ முடிந்துவிட்டதென்றும், 1924-ம் ஆ ஜநவரிமீ இப்புகைரதம் ஓடத் தொடங்குமென்றுஞ் சொல்லப்படுகின்றது. மகோ திருகோணமலைப் புகைரதப் பாதையில் மகோவிலிருந்து கிக்கராவை யென்னுமிடம்வரையில் புகைரதஸ்தானங்கள் வேலை முடிந்திருக்கின்றனவென்றும் இந்த முப்பது மைலுக்கிடையே புகைரதப் போக்குவரவு விரைவில் நடைபெறுமென்றுஞ் சொல்லப்படுகிறது.

புதல்வியைக் கொன்ற தந்தை:—நீர் கொழும்பிலே யுள்ள ஹுனுப்பிட்டியாவிலே பெருமாள் என்பவனின் புத்திரி, நடேசன் என்னும் ஒருவனுடன் சென்றுவிட்டாள். இதையிட்டுக் கவலைகொண்ட தந்தையாகிய பெருமாள் என்பவன் தன் புதல்வியாகிய பதினாறுவயதுடைய அந்த மரியா என்பவளைப் பலமுறையழைத்தும் அவள் வீட்டுக்கு வரவேயில்லை. ஒருநாள் குடிவெறியுடன் சென்று அவளையழைக்கும்போது அவள் மறுக்கவே, அவளைக் கத்தியாலே குத்திக் கொலைசெய்துவிட்டான். கொழும்புச் சுப்பிரீம் கோட்டிலே இவனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. இவன் கொலைசெய்தமைக்கு வெறியும், இவன் மகளின் துர்நடத்தையுமே காரணமாதலின் நீதிபதி இவனுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையின்பொருட்டுக் கருணை பாராட்டும்வண்ணம் தேசாதிபதிக்கெழுதுவதாகக்கூறினர். தே. நே.

உடையாத பளிங்குப் பாத்திரங்கள்:—பொஹிமியாவிலுள்ள ஒருவர் இலகுவில் உடைந்துபோகாதனவும் எவ்வகைச் சூட்டையுந் தாங்கக்கூடியனவுமாகிய பளிங்குப் பாத்திரங்களைச் செய்யும் முறையைக் கண்டுபிடித்திருக்கின்றனராம். இவர் இம்முறையைக் கண்டுபிடித்தற்குப் பதின்மூன்றுவருட காலமாக முயற்சிசெய்து இப்பொழுதுதான் சித்தியடைந்தனராம். இவராற் செய்யப்பட்ட சில பாத்திரங்களைப் பன்னிரண்டடி உயரத்திலிருந்து, பரீட்சார்த்தமாக கீழே போட்டபோது அவை உடைந்துபோகவில்லையாம். இவர் செய்த பாத்திரங்களிற் சோறு கறி சமைக்கப்பட்டபோது அப்பாத்திரங்கள் சூட்டினால் உடைந்துபோகவில்லையாம். ஒரு கண்ணாடிப்பாத்திரத்தில் ஈயத்தை இட்டு உருக்கியபோதும் அப்பாத்திரம் வெடிக்கவில்லையாம்.

### கஞ்சா விற்பனவு.

கஞ்சா இறக்குமதி விற்பனவுகளைப்பற்றிய நிபந்தனை, சட்டநிருவாகசபையிலே தேசாதிபதியவர்களாலே தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கின்றது. கஞ்சாவின் கஷாயம் அன்றி கஞ்சா பங்கி முதலிய பொருட்கள் இங்கு இறக்குமதி செய்யக்கூடாது. இக்கஞ்சாக் கஷாயம் கொழும்புத் துறைமுகத்தால் மாத்திரம் இறக்குமதி செய்யப்படல்வேண்டும். இது பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசரினால் மாத்திரம் பயிர்த்து கொடுக்கப்படும். கவர்ன்மெண்டு ஏஜண்டிடமிருந்து லைசென்சு (உத்தரவு)பெற்றவர் அன்றி ஏனையோர் கஞ்சா வைத்திருத்தல் கூடாது. உத்தரவின்பொருட்டு அரசாட்சி ஏஜண்டுக்குவிண்ணப்பிப்பவர்கள் இதன்பொருட்டு A 'வோமி' லெழுதல்வேண்டும். வைத்தியர்கள் B. வோமிலும் மருந்துச்சாலைக்காரர் C. வோமிலும் மனுச்செய்தல்வேண்டும். யோக்கியதை பெற்ற வைத்தியர்களுக்கும், மருந்துச்சாலைக்காரருக்குமே உத்தரவுகொடுக்கப்படும். வைத்தியர்களுக்கு உத்தரவு (லைசென்சு) இனாமாயளிக்கப்படும். ஆனால் விற்பனைகாரருக்கு எக்சைஸ் தீர்வையாக ரூத்தல் ஒன்றுக்கு நாற்பது ரூபாவும், பைண்ட் ஒன்றுக்கு மூன்று ரூபாவும் அறவிடப்படுவதுடன் முத்திரைத் தீர்வையாக ஐந்து ரூபா முத்திரை லைசென்சில் ஒட்டப்படவேண்டும். விற்பனைகாரர் கொழும்புக்கு மூன்றுபேர்களே நியமிக்கப்படுவார்கள். ஏனைய பகுதிகளுக்கும் மூன்றுபேர் வீதம் நியமிக்கப்படுவார்கள். —தேச நேசன்.

### அறிவித்தல்.

நொத்தாரிஸ்மாராகும் பொருட்டு அதற்கென்று ஏற்படுத்தப்பட்ட பொருத்தனைகளுக்குட்பட்டு வேலைபழக விரும்புவோரைப் பரீட்சித்தற்காய் விதிக்கப்பட்ட பிரதம பரீட்சை 1924-ம் ஆண்டு தை (ஜனவரி)மீ 8-ந் தேதியிலும் அதனையடுத்துவருந்தினங்களிலும் இலங்கை வித்தியாகர்த்தர் அவர்களால் கொழும்பில் "றிறேயினிங்கொலீஜ்" எனப்பெயர் பெறும் போதனாவித்தியாசலாசாலையில் நடத்தப்படும்.

பரீட்சையைப் பற்றிய சகல விபரங்களும் 1923-ம் ஆண்டு ஆடிமீ 6-ந்தேதியில் வெளிவந்த அரசாட்சியார் கசெற்பத்திரிகையிற் காணப்படும்.

எல். டபிள்யு. சி. விருடற்.
காணிப்பதிவுகாரியகர்த்தர்.

காணிப்பதிவுகாரியகர்த்தர்வேலைத்தலம்,
கொழும்பு 1923ஆ ஆடிமீ 14ந.
(G. 310).

## கடிதம்.

### யஜுருபாகர்ம விஷயம்.

இந்துசாதனப் பத்திராசிரியருக்கு.

பத்திராசிரிய,

இவ்வருஷத்தில் ஆடிமாதம் 28-ந்தேதி முதல் ஐப்பசிமாதம் 2-ந்தேதி வரையில் சுக்கிரன் மூடமாய் நிற்பதால், ஆவணிமாதத்தில் யஜுருபாகர்மத்தைச் செய்யக்கூடாதென்று சிலரது ஆக்ஷேபனை; செய்யலாமென்றுபலரது கருத்து. ஆடிமாதத்தில் வரும் பௌர்ணிமை சிராவண சுத்தமின்மையால், அது ஆஷாட பௌர்ணிமையாகுமேயன்றி சிராவண பௌர்ணிமையாகமாட்டாது. ஆவணிமாதத்தில்வரும் பௌர்ணிமையிலேயே யஜுர்வேதோபாகர்மம் செய்யத்தக்கது. சிராவணபாத்திரதப ஆஷாட இம்மூன்றுமாதங்களிலும்தோஷமிருக்குமாயின் சிராவண பௌர்ணிமையும் அவிட்ட நக்ஷத்திரமும் கூடியதினமே யஜுர்வேதியருக்கு உபாகர்மதினம். ஆடிமாதத்தில் வருகிற பௌர்ணிமை உத்திராட நக்ஷத்திரத்துடன் கூடி நிற்பதால் அது சிராவண பௌர்ணிமையாகமாட்டாது. ஆகையால் ஆவணிமாதம் 10-ந் தேதியில் பௌர்ணிமையும் அவிட்டமும் கூடிநிற்பதால் மேற்படி தினத்திலே உபாகர்மம் செய்யத்தக்கது. குரு சுக்கிரமூடம் பிரதமோபாகருமத்திற்கு விலக்கப்பட்டது. பிரதமோபாகர்மத்திற்கும் ஆடிமாதத்தில் சிராவண சுத்தமின்மையால் ஆவணிமாதத்திலேயேசாகாதிபதிக்குச் சாந்திசெய்து யஜுருபாகர்மஞ் செய்தல்வேண்டும்.

ச. வைத்தியநாதகுரு,
வண்-வைத்தீஸ்சுவரன்கோவில்,
அர்ச்சகர்.

### உபாகர்ம விளக்கம்.

"உபாகர்மம்" என்பது வேதம்படிக்க ஆரம்பித்தலுக்குப் பெயராம். அது வேதத்துக்கு அதிகாரிகளாயுள்ளாரால் விசேஷமாய் அனுஷ்டிக்கற்பாலதாய ஒரு கிரியை. அஃது இன்ன இன்ன வேத அதிகாரிகளால் இன்ன இன்ன காலத்தில் இன்ன விதமாய் அனுஷ்டிக்கற்பாலது என்பதை ஸ்மிருதிகளும் கல்பசூத்திரங்களும் எடுத்துக்கூறும். இவ்வருடம் யஜுர்வேத உபாகர்மதினத்தைப்பற்றி விவாதமும் அபிப்பிராயபேதமும் நிகழ்வதால் அதனைப்பற்றிய ஸ்மிருதிகர்த்தர்களாகிய மகரிஷிகளின் வாக்குக்களையீண்டுச் சிறிது ஆராய்வாம்.

மனுஸ்மிருதி: "ஆவணியில் அல்லது புரட்டாதியில் விதிப்படியாரம்பித்து" ...எனவிதிக்கின்றது. அதனை "ஆவணியில் யசுர்வேதிகளும் புரட்டாதியில் சாமவேதிகளுங் கொள்க" என வியாக்கியானகாரர் விளக்கிச் சொல்வர்.

ஆபஸ்தம்பர்:-"ஆவணிமாதப் பௌர்ணிமையில் அத்தியயனத்தை யாரம்பித்து.........." எனப்பணித்தனர்.

போதாயனர்:—ஆவணிமாதப் பௌர்ணிமையில் அல்லது ஆடி மாதப் பௌர்ணிமையில் உபாகர்மஞ் செய்து" என விதித்தனர்.

யாக்ஞவல்கியர் முதலியோர் ஆவணிமாதத்தையே கூறினர்.

மேற் கூறிய ஸ்மிருதி வசனங்களை யாராயுங்கால், ஆவணிமாதப் பூர்ணிமையே இவ்வுபாகர்மத்துக்கு விதித்த முக்கிய காலம் என்பதும் புரட்டாதி, ஆடிமாதப் பூர்ணிமைகள் கௌணகாலம் என்பதும் பெறப்படும். ஆவணிமாதத்தில் சூரியன் சிம்மராசியில் நிற்றலும் ஓஷதிகள் ஆவிர்ப்பவித்தலும் உளவாதலின் அம்மாதம் முக்கிய காலமாயிற்றென்க. ஆடிமாதம் உபாகர்மத்துக்குச் சொல்லப்படாத மாதம் என்றல் தவறு. ஏனெனில், முன்குறிப்பிட்டபடி போதாயன மகரிஷியே ஆடிமாதத்திலுஞ் செய்யலாமெனக் கூறியிருக்கின்றார் ஆதலின் என்க. சூத்திரகர்த்தர்களுள் போதாயனர் விசிஷ்டம் பெற்றவர் என்ப "போதாயனமதம் கிருத்வாஸ்வ சூத்ரபலபாக் பவேத்" என்னும் ஆப்தவாக்கியத்தால் அவர்மகிமை விளங்கத்

கிடத்தலின் அவருடைய வாக்கை உல்லங்கனஞ் செய்தல் தவறும். சிற்க.

வசிட்டஸ்மிருதியில்:--"ஆவணிமாதமானது கிரகணம் ஆசௌசம் மலமாசம் குருசுக்கிர மூடம் என்பனவற்றால் தோஷமடைந்தால் புரட்டாதியிலும், புரட்டாதியுந் தோஷமடைந்தால் ஆடியிலும் உபாகர்மத்தைக் கொள்க. இம்மூன்று மாதங்களும் தோஷயுக்தமாயிருப்பின் ஆவணிமாசத்திலேயேசெய்க" என விதிக்கப்பட்டுளது.

ஸ்வாயஸ்மிருதியும் அங்ஙனமே கூறும்.

இவற்றால் விளங்கக்கிடப்பது யாதெனில், விதிக்கப்பட்ட முக்கிய காலம் தோஷமுடையதானால் அதனை விட்டுத் தோஷமில்லாத கௌணகாலத்தைக் கொள்ளல்வேண்டுமென்பதும், இரண்டுவித காலங்களுந் தோஷயுக்தமாயிருப்பின் முக்கிய காலத்திலேயே உபாகர்மத்தை யநுஷ்டித்தல்வேண்டும் என்பதுமாம்.

"முதலுபாகர்மம் குருசுக்கிரமூடம் மலமாச முதலிய தோஷமான காலங்களிற் செய்தலாகாது" என விசேஷமாக விலக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால், இத்தோஷங்களில்லாத காலம் கௌணகாலமாயிருப்பினும்சரி அதிலே தான் செய்தல் சாஸ்திரசம்மதமாம். தோஷமில்லாத கௌணகாலமிருப்பத், தோஷயுக்தமான ஆவணிமாதத்தில் யசுர்உபாகர்மம் செய்வது சாஸ்திரவிரோதமென்பதறிக.

தோஷரகிதமானகாலமில்லாமலிருக்கும்போதுதான், அஃதாவது ஆவணி புரட்டாதி ஆடி மாதங்கள் மூன்றுந் தோஷயுக்தமாய்இருக்கும்போதுதான் ஆவணியாகிய முக்கியகாலத்தில் சாந்திபூர்வமாகச் செய்கவென விதிக்கப்பட்டது; மற்றப்படியன்று. முக்கிய காலத்துக்குரிய லக்ஷணங்கள் கௌண காலத்துக்கும் இருத்தல்வேண்டுமென்னல் பொருந்தா நியாயமென விடுக்க. இன்னும், சிங்கராசியில் சூரியன் நிற்றலாகிய நியமமும் நர்மதாநதத்திற்கு வடக்கின்கணுள்ளார்க்கே முக்கியமென்றும் தக்கணத்தார்க்குமுக்கியமன்று என்றும் கூறும் வசனமும் நோக்கத்தக்கது.

இருக்கு முதலிய நான்கு சாகைகளுக்கும் நான்கு சாகாதிசர்களுண்டு. ஒவ்வொருசாகையாளருக்கும் அவரவர் சாகாதிசன் பெலவானயிருத்தல் முக்கியம். ஒரு சாகாதிசன் பெலவானயிருந்தால் மற்றொன்றின் மௌட்டியதோஷமில்லை யென்பது பெலவானன கிரகத்துக்குரிய சாகையாளருக்கென்றறிக. எங்ஙனமெனில், சுக்கிரன் மூடமாயிருந்து குரு பெலவானயிருப்பின் இருக்குசாகையாளர் உபாகர்மஞ் செய்யலாம், என்றும் குரு மூடமாயிருக்கச் சுக்கிரன் பெலவானயிருந்தால் யசுர்வேதிகள் உபாகர்மஞ் செய்யலாம் என்றும் பிறவும் இங்ஙனே உய்த்துணர்கவென ஸ்மிருதி முக்தாபலத்தில் விளங்கக் கூறியிருத்தல் காண்க.

ஸ்வசாகாதிசன் மௌட்டிய தோஷமுற்றிருக்கும்போது, அந்நிய சாகாதிசன் பெலவானயிருத்தலை நோக்கித் தாம் உபாகர்மம்செய்தலும், தோஷரகிதமான காலமிருப்ப அதனை விட்டுத் தோஷயுக்தமான காலத்தில் சாந்திபூர்வகமாகச் செய்தலும் என்னும் இவை ஸ்மிருதி வசன விரோதமான கொள்கைகளும் செய்கைகளுமாம்.

ஆதலால், ஸ்வகர்மானுஷ்டானத்தில் சிரத்தையும் உண்மையையறிந்து ஒழுகும் ஆவலுமுள்ள ஆஸ்திகமணிகளே! இவ்வருடத்தில் யசுர் உபாகர்மத்துக்கு விகித முக்கியகாலமாகிய ஆவணிமாசம் யசுர் சாகாதிசனாகிய சுக்கிரனது மூடத்தால் தோஷமுற்றுள்ளது; புரட்டாதியு மப்படியே; அதனால் தோஷமில்லாத ஆடிமாசப் பூர்ணிமையே யசுர்உபாகர்மத்துக்குரியது என்பதும், அது கௌணகாலமாதலால் சிம்மசூரியன், ஸஸ்யவிருத்தி முதலிய முக்கியகால லக்ஷணங்கள் ஆண்டும் அமைய வேண்டுதல் பொருந்தாதென்பதும். அத்தினத்திலேதான் யசுர் உபாகர்மம் கொள்ளற்பாலது என்பதும் ஸித்தம்.

ருதிரோற்காரிஞு ஆடிமீ 1-உ. இங்ஙனம், தி. சதாசிவஐயர்.

## சிவபுராணபடனம்.

சிவபுராணம், விபூதி ருத்திராக்கதாரணம் முதலிய புண்ணியங்களையும் அவற்றின் பயனாகிய இன்பத்தையும், கொலை முதலிய பாவங்களையும் அவற்றின் பயனாகிய துன்பத்தையும் அறிவிப்பது. ஆதலால், சைவசமயிகள் யாவரும் சிவபுராணங் கேட்டல்வேண்டும். சிவபுராணபடனஞ் செய்தற்குரிய இடம் திருக்கோயில், திருமடம், தீர்த்தக்கரை, சமயாசாரமுடையவருடைய கிருகம் முதலிய சுத்த ஸ்தானங்களாம்.

கல்வியறிவு ஒழுக்கங்கள் உடையவர்களாய்ச் சிவபத்திமான்களாய் உள்ளவர்களே சிவபுராணபடனங்களை வாசித்துப் பொருள் சொல்லுதற்கு உரியவர்கள். அவர்கள் நாடோறும் ஸ்நானஞ்செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்து, நித்தியகருமம் முடித்துக்கொண்டு, கோமயத்தினாலே சுத்திசெய்யப்பட்ட புண்ணிய ஸ்தானத்திலே, பீடத்தின்மீது சிவபுராணத் திருமுறையை வைத்து, விதிப்படி பூசைசெய்து, நமஸ்கரித்து, இருந்துகொண்டு வாசித்துப் பொருள் சொல்லல்வேண்டும்.

கேட்பவர்கள் நாடோறும் ஸ்நானஞ்செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்து, நித்தியகருமம் முடித்துக்கொண்டிருந்து சிவபுராணத்திருமுறையைநமஸ்கரித்து, இருந்துகொண்டு, பிறிதொன்றிலுங் கருத்தைச் செலுத்தாது, சிரத்தையோடு கேட்டல்வேண்டும். சிவபுராணம் படிக்குஞ் சபையில் உயர்ந்த ஆசனத்திருத்தல், காலை நீட்டிக்கொண்டிருத்தல், சயனித்தல், நித்திரை செய்தல், வெற்றிலைபாக் குண்ணுதல், உடம்பு போர்த்துக்கொள்ளுதல், பிறவார்த்தைகளைப்பேசுதல்; இடையிலேயெழுந்து பிறிதொரு கருமத்திலே செல்லுதல், சிரித்தல், சிவபுராணம்வாசித்துப் பொருள்சொல்வோரை நன்கு மதியாது அவமதித்தல் முதலிய பாவங்களைச் செய்தோர் நரகத்திலே நெடுங்காலந் தண்டிக்கப்பட்டு, பின் இழிந்த பிறப்பை யடைந்து வருந்துவர். இவையெல்லாம் உபதேசகாண்டத்திலும் பிரமோத்தரகாண்டத்திலுமே காண்க.

இப்படியே இத்தேசத்துக் கோயிலதிகாரிகளும், மடாதிபதிகளும் சிவபுராணப் பிரசாரகர்களைக்கொண்டு கோயில்களிலும் மடங்களிலும் சிவபுராணங்களை வாசித்துப் பொருள் சொல்லும்படி செய்வார்களாயின், சைவசமயிகள் யாவரும் பேராசையோடு நியமமாகக் கேட்பார்களே. கேட்பார்களாயின், பெருங் கருணாநிதியாகிய சிவபெருமானுடைய மகிமையையும் புண்ணியபாவங்களையும் அவற்றின் பயன்களையும் எளிதில் அறிவார்களே. அறிவாராயின், பெரும்பான்மையும் பாவங்களுக்கு அஞ்சி தங்கள் தங்களால் இயன்ற புண்ணியங்களை விதிப்படி சிரத்தையோடு செய்து உய்வார்களே.

இந்தஈழதேசத்துள்ள திருக்கோயில்களெங்கும் பண்டுதொட்டு இதுகாறும் வருடந்தோறும் கந்தபுராணம், திருத்தொண்டர் பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலிய சிவபுராணங்களை வாசித்துப் பொருள்சொல்லி வருகின்றார்கள். சிலர் ஆலயங்கள் இல்லாத இடங்களிலே பிரத்தியேகமாக மடங்கள்கட்டி அவைகளிலே மேலே சொல்லப்பட்ட திருமுறைகள் நியமமாகக் கேட்டுவருகிறார்களே.

ஐயையோ! இக்காலத்திலே ஐரோப்பிய நாகரீகந் தலைப்படத் தலைப்பட அவ்வழக்கங்களெல்லாம் வீழ்ந்துவருகின்றனவே. இக்காலத்து எந்தக் குடும்பத்திலாவது முதியோர்களே ஆலயங்களிலே சென்று சிவபுராணங்களைக் கேட்கின்றார்கள். அவர்களுடைய பெண்மணிகளும் புதல்வர்களும் ஐரோப்பிய நாகரிகம் தலைப்பட்டதினாலே சிவபுராணங்கள் எல்லாம் பொய்யென்று உவர்த்து விடுகின்றார்கள். இவ்வாறே ஒவ்வொரு குடும்பத்திலும் முன்னோர் சைவசமய விசுவாசிகளாயும், அவர்கள் பிற்சந்ததியாராகவுள்ளவர்கள் சைவசமயத்திலே அவநம்பிக்கையுடையராயும் இருப்பார்களேயாயின், நம் சைவசமயம் விருத்தியாய்ச் சமயாபிமானம் உண்டாவது எப்படி? இவைகளுக்கெல்லாங் காரணம் தமிழ்க்கல்வி யில்லாமையும் சைவசமய உணர்ச்சி இல்லாமையுமேயாம்.

இங்ஙனம்,
S. V. R. M.

## தென் தமிழ்த் தனிமாட்சி.

(ஸ்ரீமத் து. கைலாசபிள்ளையவர்களெழுதியது)

"ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந் திதனினிது
சீரியதென் றொன்றைச் செப்பரிதால்--ஆரியம்
வேத முடைத்து தமிழ்திரு வள்ளுவனார்
ஓது குறட்பா வுடைத்து".

—வண்ணக்கஞ்சாத்தனார்.

1. தமிழ்ப்பாஷைக்கு இயல்பிலே ஓரளவுக்குப் பெருமையிருக்கவும், இப்பொழுது பத்திராதிபர்மார் சிலர் அதற்கு இல்லாத சில பெருமைகளைக் கற்பித்து உள்ள பெருமையையுங் கெடுக்கிறார்கள். இவருள், சிலர் தமிழ்நாடாகிய பாண்டிநாடே ஆதிமனிதர் முதல் உற்பத்தியான இடமென்றும், சிலர் தமிழே முதற் பாஷையென்றும், சிலர் இப்பொழுது சிவாக்கிரயோகி ஞானப்பிரகாசசுவாமி முதலானோரால் பாஷ்யங்கள் செய்யப்பெற்று விளங்கும் வடமொழிச் சிவஞானபோதமும் வேதசிவாகமங்களும் தமிழிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டனவென்றும் சொல்லுகிறார்கள். அப்படியிருக்கக்கூடாதோ இருந்தாலென்னவெனின்; அது உண்மையானால் நல்லது, பொய்யானால் ஆகாது. உண்மையோ வென்பதை ஆராய்வோம். இப்படிச் சொல்லுபவர்கள் சில ஐரோப்பிய பண்டிதர்களெழுதிய Geology Astronomy, Anthropology, Philology, ஆதிய நூல்களையே தமக்குப் பிரமாணமாக எடுத்துக் காட்டுகிறார்கள். இவர்கள் தாமாக மண்ணிற் புகுந்தாவது விண்ணிற் பறந்தாவது இவைகளுள் ஒன்றையும் கண்டவர்களல்லர். நானும் அவ்வைரோப்பிய பண்டிதர் எழுதியவைகளையும் நம்மவர் சிலர் எழுதியவைகளையும் எடுத்துக் காட்டிச் சில சொல்லுகின்றேன். இவருட் சிலர் சில பிராமணர்மேற் கொண்ட கோபத்தினாலே வேதசிவாகமங்களையும் வேள்விகளையும் இகழுகிறார்கள். ஆரியரென்ற சொல்லைக் கேட்டாலும் இவர்களுக்குக் கேடு முட்டும். இவர்களுள் ஒருவர் சிவஞானசித்தியாரைத் தமிழ்நூலென்று ஏற்றுக்கொண்டார். ஏற்றும், அந்தச் சிவஞானசித்தியாரிலேயே 'ஆரியன குலாலனும் நின்று ஆக்குவன் அகிலமெல்லாம்' 'ஆரியனுமாசான் வந்தருளாற்றோன்றும்' என்றும், தேவாரத்தில் 'ஆரியன் கண்டாய்' என்றும் அருளப்பட்டிருத்தலை மதிக்கின்றிலர். இவர்கள் இந்தியாவுக்குச் சுயராச்சியம் வந்தால் தாங்கள் ஆரியப்பிராமணருக்கு அடிமைப்படல் வேண்டுமென்று பயந்து சுயராச்சியம் வேண்டாமென்கிறார்கள். அதுமாத்திரமா சாதிபேதமில்லையென்றுஞ் சொல்லுகிறார்கள். இங்கிலிசுகாரர் தாங்களும் ஆரியரென்று சொல்ல, அதையும் ஒத்துக்கொண்டு இங்கிலிசு ஆரியருக்குக் கீழே இருப்போம் இந்திய ஆரியருக்குக் கீழே இருக்கமாட்டோம் என்கிறார்கள். கல்வியறிவில்லாத சில சனங்கள், இவர்களுடைய இந்த வீண் பேச்சை நம்பி பிதாமாதாக்களுக்குச் செய்யவேண்டிய அந்தியேட்டி சபிண்டீகரணம் ஆப்திகம் அமாவாசை விரதம் முதலானவை பத்துப்பாட்டு எட்டுத்தொகை பதினெண் கீழ்க்கணக்கு முதலிய தமிழ்நூல்களில் விதிக்கப்படாமையால், அவைகளைச் செய்கிறதில்லையென்று சொல்லிவிடுகிறார்கள். சிலர் ஆசௌசம் என்றொன்று இல்லை என்கிறார்கள். சிலர் சாதியென்றொன்றில்லையென்கிறார்கள்; சிலர் கங்கா ஸ்நானத்தை அவமதிக்கின்றார்கள்; சிலர் 'கடைசியிற் பார்த்தால் எல்லாம் மனுஷருடைய கட்டு' என்று சொல்லிச் சமயவிசுவாசங் கெட்டவராகிறார்கள். இவைதாம் இவர்களால் விளைந்த பலன்கள்.

2. இவருள்ளும் பல கட்சிகளுண்டு. சிலர் எல்லாச் சாத்திரங்களும் தெற்கே பாண்டிநாட்டிலே உதித்தன என்பர்; சிலர் அவை வடக்கேயிருந்து வந்தனவென்பர்; சிலர் இச் சாத்திரங்களெல்லாம் தமிழிலிருந்து சம்ஸ்கிருதத்துக்கு மொழிபெயர்க்கப்பட்டனவென்பர்; சிலர் புராணங்களும் இதிகாசங்களும் மிருதிகளும் ஆரியருடைய கட்டு என்பர்; சிலர் வேத ஆகமங்களும் அவர்கள் கட்டியன என்பர்; சிலர் பிராமணரெனப்பட்டவரெல்லாம் ஆரியரென்று விலக்குவர்; சிலர் ஆதிசைவப்பிராமணர்மாத்திரம் ஆரியரல்லரென்று கொள்வர். இவர்கள் ஒருவரோடொருவர் மாறுபடுகிறது மாத்திரமன்றி, ஒவ்வொருவரும் தாமே முன்னோடு பின் மாறுபடச்சொல்லி எடுத்த விஷயத்தைத் தாபிக்க முடியாமல் தத்தளிக்கின்றார்கள்.

3. ஒருவர் "ஆகவே உலகில் நடுக்கோட்டுப் பகுதியே Equitorial regions 'முதலிற்றரைப் பாங்கு அடைந்தது' 'இவ்வாறு முதலிற் குளிர்ந்த பகுதியிற்றான் தமிழகமுள்ளது. எனவே, தமிழகமானது உயிர்த்தொகை தோன்றற்கேற்ற வசதிகள் முதல் முதல் வாய்க்கப்பெற்றபகுதியிலுள்ளதென்பதுவிளங்கும்" என்றார். மற்றொருவர் "முதற்கண் மக்கள் தோன்றி வாழ்வமைந்திருந்தது பாண்டிநாடுதான்" என்றும் "இங்ஙனம் மக்கட்படைப்பிற்கும் அவர்கள் உயர்நலவாழ்விற்கும் இடமாக இருந்த நிலத்தே வழங்கிய மொழி தமிழே" என்றும் கூறினர். இவரே விந்தியமலைக்கு (இதற்குத் தமிழ்ச்சொல் இல்லைப்போலும்) வடக்கே பனிமலை வரையும் பரவியுள்ள நிலப் பகுதியின் பெரும்பாகம் கடலுள் மூழ்கியிருந்த காலத்தே தென்னாடு நிலப்பரப்பாக இருந்ததெனவும் பனிமலையினும் பொதியின்மலை மிக்க முதுமையுடைத்து எனவும் கேட்கின்றோம்" எனவும் "தமிழ்ப்பெருநாடுதானே பலநூறாயிரமாண்டுகட்குமுன் மக்கட்தோற்றத்திற்கும் காரணமான நிலப்பிரிவாகத் தோற்றுகின்றது" என்றும் சொன்னார்.

4. இப்படிச் சொல்லுதலினாலே, விந்தத்துக்கும் இமயத்துக்கும் இடையேயுள்ள ஆரியாவர்த்த மென்னும் ஆரிய பூமி கடலாயிருந்த காலத்திலே தெற்கே தமிழர் இருந்திருக்கிறார்கள் என்று இவர்கள் நினைக்கிறார்கள்போற்றோற்றுகின்றது. இவர்களுடைய காலக்கணக்கைக் கேட்கத் தலை விறைக்கின்றது. இவர்களுடைய கணக்கு உலகத்திலுள்ள மற்றெம்மலையினும் மிக உயரமானதாகிய இமையமும் கயிலையுந் தோன்றுதற்கு முன்னாகிய காலமாதலால், அது "மலைபான் மகளொடும் பாடி" "மலைக்கு மருகனைப் பாடிப்பாடி" "கங்கைவார் சடையாய்" "கங்கை தங்கிய சடையுடைக் கரும்பே" "மலைமகள் மகனே" எனவுந் தேவார திருவாசக திருமுருகாற்றுப்படைகளிற் சொல்லப்பட்ட சிவபெருமானும் உமாதேவியும் திருமுருகரும் பிறக்க முன்னுள்ள காலமாகும். அடடா! இதை இவர்கள் தாம் போய்ப் பார்த்து வந்தவர்கள்போலும். ஆரியாவர்த்தம் கடலாகவும் தமிழ்நாடு நாடாகவும் இருந்தற்கு முன் ஒருகாத்லதில் தென்னாடு கடலாயிருந்தது இவர்களுக்குத் தெரியாதோ. ஆரியாவர்த்தம் கடலாயிருந்ததைப்பற்றித் தமிழ்நூல்களின் எங்கேனுஞ் சொல்லப்பட்டிருக்கிறதா!

5. இப்படி எழுதுகிறவர்களே பின் "இங்ஙனம் ஆராய்ந்தவழி ஆரியமொழியின் இனத்தை மேற்கில் நெடுந்தொலையிலுள்ள வேல்ஸ் நாடளவுங் கண்டனர். இவ்வாராய்ச்சியிற் பெரும்பாலன மக்களின் முதற்றாய்நாடு மத்திய ஆசியா (Asia Minor) என்னும் முடிபில் நிற்பனவாம். சில வேறு முடிபைக் கொண்டவை" எனவும் "கால முறைப்படுத்துக் காணுங்கால், இக்கோவை முதல் தெற்கே தொடங்கிப் பின்னர் வடக்கு வடமேற்குத் திக்குகளில் நீண்டது என்பதோ, அல்லது வடக்கு வடமேற்கில் தொடங்கி நாளடைவில் தெற்கு நோக்கிச் சென்று முடிந்ததோ உறுதியாய்க் கூற முடியாது" எனவும் கூறியிருக்கின்றார்கள்.

6. "Dr. Warren has come to the conclusion that the original home of the human race must be sought for in regions near the North Pole".

7. "Several Scientific men have now led to think that we must look for the cradle of the human race in the Artic regions".

8 "Avesta expressly tells us that the happy land of Ariyana Vaijo or the Arian Paradise was located in a region where the sun shon but once a year and that it was destroyed by the invasion of snow and ice which rendered its climate inclement and necessitated a migration southward". என்று ஸ்ரீ திலகர் பலருடைய அபிப்பிராயங்களையும் எடுத்துக் காட்டி மனிதருடைய உற்பத்தித்தானம் வடதுருவமென்று நிரூபித்தார்.

9. "There were man and animals in the North Pole in the interglacial Period". என்று அவரே மனிதப்பிறப்பு மாத்திரமன்று அங்கே விலங்குகளும் இருந்தன என்றார்.

10. "It is difficult to assign a shorter date for the last glaciation of Europe than a quarter of million of years and human existence antidates that".

11. "As regards the races which inhabited Europe in these early ages the evidence furnished by human remains or skulls show that they were the direct ancestors of the races now living in the different parts of Europe".

12. "In the old glacial drift of Scotland the relics of man are found along with those of fossil elephants". என்று William Draper என்னும் பண்டிதரும் ஐரோப்பாக் கண்டத்தில் முன்னிருந்தவர்களே இப்போது அங்கே இருப்பவருக்கெல்லாம் முதாதையரென்றார்.

இப்படி இன்னும் அநேக ஐரோப்பிய இந்திய பண்டிதர்கள் வடதுருவமே மனிதருக்கு உற்பத்தித்தானமென்கிறார்கள். பாரசீயருடைய சாத்திரமும் அப்படியே சொல்லுகின்றது. மனிதருடைய மண்டையோடு காணப்படும் இடத்துக்குக் கீழேதான் சித்தாந்திகளுடைய கல்லால மரமும் அடி தேடிப்போன பன்றியும் பழைய தமிழ் ஏடுகளும் காணப்படும் போலும்!

14. மத்திய ரேகைக்குப் பக்கத்திலுள்ள தேசமே மனுஷர் வாசம்பண்ண வசதியான இடமாயிருந்தது என்றும், அது தமிழ்நாடுதான் என்றும் ஒருவர் சொன்னாரே. அந்தத் தேசம் ஆபிரிக்காவாயிருந்தாலென்ன. அதுவும் மத்திய ரேகைக்கு இருபக்கத்திலுமுள்ளதுதானே. ஆபிரிக்காவிலுள்ள எகிப்து தேசத்திலுள்ளவர்களே முதற் சீர்திருந்தினவர்களென்பதும் பழையவர்களென்பதும் அநேகர் கருத்து. "Thus we find a high state of civilization in Egypt at about 6000 B. C. எனத் திலகர் எகிப்தியர் இற்றைக்கு எண்ணாயிரம் வருஷங்களுக்கு முன்னேயே சீர்திருந்தினவர்கள் என்று கூறுகின்றார்.

## தேக்கமரம்.

திறமான பர்மாதேச தேக்கமரத் தீராந்திகள். நீளம், 10 அடி தொடக்கம் 35 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலந் தொடக்கம் 18 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எம்மிடத்தில் விலைக்குக் கிடைக்கும்.

S. வீரகத்திப்பிள்ளை,
(H. 16) தொண்டமானாறு.

## பிரகடனம்.

நல்லூர், விநாயகமூர்த்திச் செட்டியார் பாடிய
**கதிரையாத்திரை விளக்கம்**

ஆறுமுகநாவலரவர்கள் பாடிய
**கதிர்காமவேலவர் கீர்த்தனம்**

பரமானந்தப் புலவர் பாடிய
**நல்லைக் கந்தர் கீர்த்தனம், கந்த ரகவல்**
என்னுமிவைகள் ஒருங்கு அச்சிடப்பட்டு வெளிவந்திருக்கின்றன.

சுப்பிரமணியதொண்டர் ஒவ்வொருவர் கையிலுமிருக்கவேண்டிய நூல். கதிரையாத்திரை செய்வோர் வழிக்கு உறுதுணையாகவுள்ளது.

விலை சதம் உரு.

5 பிரதிகள் ஒருங்கு வாங்குவோருக்கு ஒரு பிரதி மேலதிகமாகக் கொடுக்கப்படும். பிரதிகள் எம்மிடத்திற் பெறற்பாலன.

ம. வே. திருஞானசம்பந்தன்,
"இந்துசாதன" ஆபீஸ்,
(Mis. 355.) வண்ணார்பண்ணை.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva prakasa Press, Jaffna.